## கே.எம்.சி.எச். கேன்சர் மையத்தில்

# புற்றுநோய்க்கு மறுசீரமைப்பு நுண் அறுவை சிகிச்சை

கோவை, ஜூலை 20: கோவை கே.எம்.சி.எச் மருத்துவமனையில் புற்றுநோய்க்கான அறுவை மற்றும் மறுசீரமைப்பு நுண் அறுவை சிகிச்சை செய்யப்படுகிறது.


டாக்டர் நம்பி

இன்றைய நவீன உலகில் புற்றுநோய் என்பது அதிகப்படியான இறப்புகளை ஏற்படுத்துகிறது. தேவையற்ற பழக்கங்களே புற்றுநோயின் அடிப்படை காரணமாக அமைந்து விடுகிறது. வாய், தொண்டை, உணவுக்குழாய், தலை, மார்பகம், நாக்கு உள்ளிட்ட பகுதிகளில் புற்றுநோய் பாதிப்புகள் அதிக அளவில் ஏற்படுகிறது. இத்தகு பாதிப்பினால் இப்பகுதிகளில் ஏற்படும் மாற்றங்களை சரி செய்ய நுண் அறுவை சிகிச்சை செய்யப்படுகிறது.

இந்த நுண் அறுவை சிகிச்சையின் மூலம் பாதிக்கப்பட்ட பகுதிகள் அறுவை சிகிச்சை மூலம் நீக்கப்பட்டு கை, கால், தொடை, வயிறு, முதுகு பகுதி, உள்ளிட்ட இடங்களில் இருந்து தேவைவப்படும் சதையை எடுத்து பொருத்தப்படுகிறது. தேவைப் படும் பட்சத்தில் இயற்கை எலும்புகளுடன் செயற்கை எலும்புகளும் இணைத்து உடலில் பாதிக்கப்பட்ட இடத்தில் பொருத்தலாம். தொண்டை மற்றும் உணவு குழாயில் பாதிப்புகள் ஏற்படும் பொழுது சிறுகுடலின் ஒரு பகுதி எடுத்து தொண்டை பகுதியில் உள்ள குழாயுடன் இணைக்கப்படும். இதனால் பாதிக்கப்பட்டவர் பழையபடி உணவு உட்கொள்ள முடியும். இத்தகு அறுவை சிகிச்சை மேற்கொள்ள 6 முதல் 8 மணி நேரம் தேவைப்படும்.

புகைப்பிடித்தல், புகையிலை பயன்படுத்துதல், பாக்கு, பான்பராக், குட்கா உள்ளிட்டவைகளை பயன்படுத்துவதால் அதிக அளவில் இந்நோய் ஏற்படுகிறது. இது தவிர வாயில் ஆறாத புண், திடீர் குரல் மாற்றம், உணவு விழுங்குவதில் சிரமம் உள்ளிட்ட பல்வேறு அறிகுறிகள் தெரிந்தால் உடனே மருத்துவர்களை அணுகலாம்.

இது குறித்து புற்றுநோய் மறுசீரமைப்பு நுண் அறுவை சிகிச்சை நிபுணர் நம்பி கூறியதாவது.

மறுசீரமைப்பு அறுவை சிகிச்சை பாதிக்கப்பட்ட அனைவருக்கும் செய்யப்படுவதில்லை. பாதிக்கப்பட்டவர்களின் உடல் எடை, நோய் பாதிப்பின் தாக்கம், பாதிக்கப்பட்டவர்களின் உடல் மாற்றம், மனநிலை உள்ளிட்ட பல்வேறு விஷயங்கள் ஆராய்ந்து அறுவை சிகிச்சை செய்ய அறிவுறுத்தப்படுகின்றனர்.

தொடர்ந்து 10 வருடங்களுக்கு அதிகப்படியாக புகை பிடிப்பவர் எவராக இருப்பினும் 30 சதவீதம் புற்றுநோய் ஏற்பட வாய்ப்புள்ளது. இத்தகு நோய்கள் வந்த பின் சிகிச்சை மேற்கொள்வதை காட்டிலும் வராமல் தவிர்க்க அனைத்து முயற்சிகளையும் மேற்கொள்ள வேண்டும். சிறு கட்டிகளாக அல்லது புண்களாக இருந்து பின்பு புற்றுநோயாக மாறுகிறது. இதன் மூலம் பல்வேறு நோய்கள் பற்றிய விழிப்புணர்வை அவர்களுக்கு ஏற்படுத்துவதன் மூலம் நோயின் தாக்கத்தை நம் கட்டுப்பாட்டிற்குள் வைக்கலாம்.

புகை பிடிப்பதால் 20 சதவீதம் பேருக்கும், புகையிலை போடுவதால் 30 சதவீதம் பேருக்கும் கேன்சர் வர வாய்ப்புண்டு. அனைத்து வகை புற்றுநோய்களால் ஆண்டுக்கு 7 லட்சம் பேர் பாதிக்கப்படுவதாகவும், இதில் 3.5 லட்சம் பேர்கள் இறந்து விடுவதாகவும் 2.25 லட்சம் பேர்கள் தலை, கழுத்து, புற்றுநோயால் அவதிப்படுவதாகவும் புள்ளிவிவரம் தெரிவிக்கிறது.

இவ்வாறு டாக்டர் நம்பி கூறினார்.